தமிழ்நாடு அரசு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம் அறிவிக்கை (Notification) அலுவலக உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம்

ந.க.எண்:அ1/3788/2023 நாள்:15.11.2023

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்தில் ஊராட்சி ஒன்றிய துறப்பு அலுவலக உதவியாளர் நிலையில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

<table>
<tr><td>1</td><td>பதவியின் பெயர்</td><td></td><td>அலுவலக உதவியாளர்</td></tr>
<tr><td>2</td><td>பணியின் தன்மை</td><td></td><td>அலுவலக தலைவர், பிரிவு தலைவர், பணியாளர்களின் உடனிருத்தல், கோப்புகள் எடுத்து செல்லுதல் மற்றும் பிற அலுவலக பணிகள் செய்தல்.</td></tr>
<tr><td>3</td><td>ஊதியம்</td><td></td><td>ரூ.15700 – 58100 என்ற ஊதிய அட்டவணையில் அரசு நிர்ணயம் செய்யும் பிற படிகளுடன்.</td></tr>
<tr><td>4</td><td>வயது வரம்பு</td><td></td><td>
<table>
<tr><th>பிரிவு</th><th>குறைந்தபட்ச வயது வரம்பு</th><th>நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அதிகபட்ச வயது வரம்பு</th></tr>
<tr><td>பொது பிரிவு</td><td>18</td><td>32</td></tr>
<tr><td>பிற்படுத்தப்பட்டோர்</td><td>18</td><td>34</td></tr>
<tr><td>மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்</td><td>18</td><td>34</td></tr>
<tr><td>ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர்</td><td>18</td><td>37</td></tr>
<tr><td>ஆதரவற்ற விதவை</td><td>18</td><td>37</td></tr>
<tr><td>மாற்றுத்திறனாளி</td><td>18</td><td>ஒவ்வொரு பிரிவினருக்கு நிர்ணயிக்கப்பட்ட உச்சபட்ச வயது வரம்பில் கூடுதலாக 10 ஆண்டுகள்</td></tr>
<tr><td>முன்னாள் ராணுவத்தினர்</td><td>18</td><td>GT-48 Years & BC/MBC/SC/ST-53 Years.</td></tr>
<tr><td colspan="3">01.07.2023 அன்று 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். மேற்கண்ட தேதியில் அதிகபட்ச வயது வரம்பு பூர்த்தியடைந்தவராக இருக்கக் கூடாது.</td></tr>
</table>
</td></tr>
<tr><td>5</td><td>மொத்த காலி பணியிடங்கள்</td><td></td><td>2</td></tr>
<tr><td>6</td><td>இட ஒதுக்கீடு விவரங்கள்</td><td></td><td>
<table>
<tr><th>வ. எண்</th><th>இனசுழற்சி விபரம்</th><th>முன்னுரிமை பெற்றவர் / முன்னுரிமை அற்றவர்</th><th>முன்னுரிமை விபரம்</th></tr>
<tr><td>1.</td><td>பொது</td><td>முன்னுரிமை பெற்றவர்</td><td>கொரோனா தொற்றிலோ, இதர காரணங்களாலோ பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள் (மகன்/மகள்)</td></tr>
<tr><td>2.</td><td>ஆதிதிராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியினர்)</td><td>முன்னுரிமை பெற்றவர்</td><td>மகளிர் – ஆதரவற்ற விதவை</td></tr>
</table>
</td></tr>
<tr><td>7</td><td>கல்வித் தகுதி</td><td></td><td>8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.</td></tr>
<tr><td>8</td><td>விண்ணப்பம் வந்து சேர வேண்டிய கடைசி நாள்</td><td></td><td>24.11.2023 மாலை 5.45<br>விண்ணப்ப படிவம் https://www.viluppuram.nic.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>9</td><td>இதர தகுதிகள்</td><td></td><td>மிதிவண்டி மற்றும் இருசக்கர மோட்டார் வாகனம் ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும்.</td></tr>
</table>

நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, சாதிச்சான்று,முன்னுரிமை சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.

2. இனசுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதியுள்ள நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்கப்படும்.

3. விண்ணப்ப படிவத்தில் உள்ள விபரங்களை முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும்.

4. சுயமுகவரியுடன் கூடிய அஞ்சல் வில்லை ரூ.30/—ஒட்டப்பட்ட அஞ்சல் உறை—1 **(10x4 Inches Postal Cover)** இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

5. தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு.

8. அரசு விதிகளின்படி இனசுழற்சி முறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் அலுவலக வேலை நாட்களில் ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், விக்கிரவாண்டி, விழுப்புரம் மாவட்டம் — 604 652 என்ற முகவரிக்கு 24.11.2023 மாலை 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

தகுதியுள்ள விண்ணப்பத்தாரர்களுக்கு நேர்காணல் நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்த தகவல் பதிவஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படும். அலுவலக உதவியாளர் காலிப்பணியிங்களுக்கான விவரங்கள் மற்றும் விண்ணப்ப படிவம் விழுப்புரம் மாவட்டத்திற்கான **https://www.viluppuram.nic.in** என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

15/11/2023

ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம், விக்கிரவாண்டி.

15/11/23

விண்ணப்பப் படிவம்

விழுப்புரம் மாவட்டம்

விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம்

அலுவலக உதவியாளர் பணிக்கான விண்ணப்பம்

(விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள்.....................................

(பொருத்தமான இடத்தில் (✓) செய்யவும்)

| | | | |
|---|---|---|---|
| 1 | விண்ணப்பதாரர் பெயர் | | புகைப்படம் (கையொப்பத்துடன்) |
| 2 | பாலினம் | ஆண்/பெண்/திருநங்கை | |
| 3 | தந்தை/கணவர் பெயர் | | |
| 4 | பிறந்த தேதி | நாள் / மாதம் / வருடம் | |
| 5 | வயது (01.07.2023 தேதியில்) | | |
| 6 | கல்வித் தகுதி | | |
| 7 | தற்போதைய முகவரி | | |
| 8 | நிலையான முகவரி | | |
| 9 | விண்ணப்பதாரரின் தொலைபேசி எண் / கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி | | |
| 10 | மதம் | இந்து/முஸ்லீம்/கிறிஸ்தவர்/இதர மதத்தினர் | |
| 11 | வகுப்பு / பிரிவு | | |
| 12 | சொந்த மாவட்டம் | | |
| 13 | எந்த வகையான முன்னுரிமை (ஆதாரமாக சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | கொரோனா தொற்றிலோ, இதர காரணங்களாலோ பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள் (மகன்/மகள்) | |
| | | ஆதரவற்ற விதவை | |

| 14 | கீழ்க்கண்ட சான்று நகல்களை இணைத்துள்ளேன் | | (பொறுத்தமானவற்றை (✓) செய்யவும்) |
|---|---|---|---|
| அ | பள்ளிமாற்றுச் சான்றிதழ் | | |
| ஆ | கல்வித் தகுதிச் சான்று | | |
| இ | சாதிச் சான்று | | |
| ஈ | முன்னுரிமைச் சான்று (பொருந்தும் நேர்வில் | | |
| ஊ | (ஆதார் அட்டை / வாக்காளர் அடையாள அட்டை / குடும்ப அட்டை / வீட்டு வரி ரசீது) ஏதேனும் ஒன்று | | |
| ஏ | முகவரியுடன் கூடிய அஞ்சல் வில்லை ரூ.30/– ஒட்டப்பட்ட அஞ்சல் உறை–1 (10*4 Inches Postal Cover) | | |

<u>உறுதிமொழி</u>

மேற்குறிப்பிட்டுள்ள விவரங்கள் யாவும் சரியானவை என உறுதியளிக்கிறேன். இதில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டால் தேர்வு குழுவினரால் எடுக்கப்படும் அனைத்து வகையான நடவடிக்கைகளுக்கும் நான் கட்டுப்படுவேன் எனவும் உறுதியளிக்கிறேன். என் மீது குற்றவியல் வழக்குகள் ஏதும் பதியப்படவில்லை என உறுதியளிக்கிறேன்.

நாள் :

இடம் :

விண்ணப்பதாரர் கையொப்பம்

<u>குறிப்பு</u>

1. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் போது சுயச்சான்றொப்பமிட்ட சான்றிதழ் நகல்கள் (Self Attested Xerox Copies) இணைத்தனுப்பப்பட வேண்டும்.
2. சுயமுகவரியுடன் கூடிய அஞ்சல் வில்லை ரூ.30/– ஒட்டப்பட்ட அஞ்சல் உறை–1 (10*4 Inches Postal Cover) இணைத்து அனுப்பப்பட வேண்டும்.